இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 10 – ஞாயிற்றுக்கிழமை 25 ஜூன் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 315 : Thiruvalluvar Year - 2054 - Aani 10 - Sunday 25 June 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி

# தமிழ்நாடு முழுவதும் 103 மருத்துவ முகாம்கள்!

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்றன!

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு:** ஏழை எளிய மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் நடத்தப்படும்

## பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 25- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு ஏழை எளிய நோயாளிகளுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் அரசு மருத்துவமனைகளும், தனியார் மருத்துவமனைகளும் இணைந்து நடத்தும் பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன் என, சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடெங்கும் 103 பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–



'வருமுன் காப்போம்' திட்டத்தை வகுத்தளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, மக்கள் நல்வாழ்வுத் துறையின் மற்றுமொரு முன்னோடி முயற்சியாக, தமிழ்நாடெங்கும் 103 பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வழக்கமான மருத்துவ ஆலோசனைகளோடு, சிறப்புப்பிரிவு மருத்துவர்களைக் கொண்டு, தொற்று நோய்களையும் தொற்றா நோய்களையும் உடனடியாகக் கண்டறியக்கூடிய பரிசோதனை களையும் மேற்கொள்ளக் கூடிய வகையில் இந்த முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஏழை எளிய நோயாளிகளுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில், அரசு மருத்துவமனைகளும், தனியார் மருத்துவமனைகளும் இணைந்து நடத்தும் இந்த முகாம்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

இந்தப் பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் அமைச்சர்கள் – மருத்துவர்கள் – செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.

**சென்னை, ஜூன் 25 – தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் சிறப்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார். அந்த வகையில் தமிழ்நாட்டில் நேற்று (24.6.2023) ஒரே நாளில் அரசு மருத்துவக்கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என்று 30 துறைகளை ஒருங்கிணைத்து பெரிய அளவில் 103 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.**

சென்னையைப் பொறுத்தவரை 15 மண்டலங்கள் இருக்கின்றன. 15 மண்டலங்களில் ஏற்கெனவே 5 மண்டலங்களில் ஏற்கெனவே முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள மண்டலங்களில் 10 இடங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் 90 இடங்களிலும் என்று ஒரே நாளில் 103 மருத்துவ முகாம்கள் காலை தொடங்கி மாலை 5 மணி வரை இம்முகாம்கள் நடைபெற்றன.

பொதுமக்கள் இம்முகாம்களில் பயன்பெறும் வகையில் பல துறைகள் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது. மேலும் காசநோய் கண்டறிவதற்கு டிஜிட்டல் எக்ஸ்ரே பொருத்திய 28 வாகனங்களையும், தனியார் மருத்துவமனையில் உள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ உபகரணங்களை இந்த மருத்துவ முகாம்களில் பயன்படுத்தப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாடு முழுவதும் 103 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை கோடம்பாக்கம் புலியூர் மற்றும் எண்ணூர் ஆகிய இடங்களில் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நேற்று தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 100 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. நூற்றாண்டு விழாவினை ஒட்டி 100 இடங்களில் மருத்துவ முகாம்கள் என்கின்ற அறிவிப்பு, மக்களின் வசதிக்கு ஏற்ப ஆங்காங்கே தேவைகளுக்கு ஏற்பவும், நேற்று 103 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்றது.

குறிப்பாக சென்னையில் 11 இடங்களிலும், தர்மபுரியில் 2 இடங்களிலும், மதுரையில் 6 இடங்களிலும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், இராமநாதபுரம், விருதுநகர், ஆகிய மாவட்டங்களில் 3 எண்ணிக்கைகளில் இந்த முகாம்கள் நடைபெற்றன. சேலம் மாவட்டத்தில் 5 இடங்களிலும், கடலூர் மாவட்டத்தில் 4 இடங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 இடங்கள் என்று இந்த மருத்துவ முகாம்கள் 103 இடங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு முகாம்களிலும் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்றனர்.

மேலும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தினைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ந்தேதி இளம் சிறுவர்களுக்கு கண்ணொளி காப்போம் என்கின்ற திட்டத்தினையும் முத்தமிழறிஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டது. மிக விரைவில் கண்ணொளி முகாம்கள் என்கின்ற வகையில் தமிழ்நாட்டில் 100 இடங்களில் நடத்தப்படவிருக்கிறது.

சென்னையில் நடத்தப்பட்ட முகாம்களை பொறுத்தவரை சென்னை மாநகராட்சி, சென்னை ஓமந்தூரார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையும், மெட்வே என்கின்ற தனியார் மருத்துவமனையும், மேத்தா என்கின்ற தனியார் மருத்துவமனையும் சிம்ஸ் என்கின்ற தனியார் மருத்துவமனையும் சென்னை, கோடம்பாக்கம், புலியூரில் நடைபெற்று வரும் முகாம்களில் இணைந்திருந்தனர்.

இந்த மருத்துவ முகாம்களில் எக்ஸ்ரே, கருப்பைவாய் சிகிச்சை போன்றவை பரிசோதனை செய்தனர். மேலும் சிகிச்சையினை பொறுத்தவரை பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மனநல மருத்துவ ஆலோசனை, சித்த மருத்துவம், ஆயுர்வேதம் மருத்துவம் என்று பல துறைகளின் சார்பில் மருத்துவம் பார்க்கப்பட்டன.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# 6 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெறுவர்!

## குறுவைத் தொகுப்புத் திட்டம் - ரூ.76 கோடி நிதி ஒதுக்கி அரசாணை!

சென்னை, ஜூன் 25 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி, குறுவைத் தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்த 75 கோடியே 95 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து நேற்று தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்தது.

காவிரி டெல்டா மாவட்டங்களில், குறுவை பருவத்தில், பயிர்சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்காகவும், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கவும் தமிழ்நாடு அரசு குறுவைத் தொகுப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்த தொகுப்பைப் பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் ஈட்டி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த ஜூன் 12-ஆம் தேதி, குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை திறந்து வைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்தாண்டு 75 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் குறுவைத் தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். இதைத் தொடர்ந்து, குறுவைத் தொகுப்புக்கான அரசாணையை நேற்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஏக்கருக்கு 45 கிலோ யூரியா, 50 கிலோ டிஏபி, 25 கிலோ பொட்டாஷ் என்ற விகிதத்தில் இரண்டரை லட்சம் ஏக்கருக்கு தேவையான ரசாயன உரம் முழு மானியத்திலும், ஒரு லட்சத்து 24 ஆயிரம் ஏக்கருக்குத் தேவையான நெல் விதைகள் 50 சதவீதம் மானியத்திலும், மாற்றுப் பயிர் சாகுபடிக்காக 15 ஆயிரத்து 818 ஏக்கருக்கு மாற்றுப்படி சாகுபடித் தொகுப்பு, 6 ஆயிரத்து 250 ஏக்கரில் பசுந்தாள் உர விதைகள், 747 பவர் டில்லர்கள், 15 பவர் வீடர்கள் மானியத்தில் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் மூலம், 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள். குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின், அனைத்து இனங்களின் கீழ் வழங்கப்படும் பொருள் மற்றும் நிதி இலக்குகளை, எவ்வித குறைவுமின்றி, முறையாக, வருகின்ற ஜூலை 31ஆம் தேதிக்குள் முழுமையாக முடித்திட வேண்டும்.

அறிவித்துள்ள குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினை முழுமையாக செயல்படுத்தி, 2023ஆம் ஆண்டு குறுவை நெல் சாகுபடி பரப்பினை அதிகரிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

## சென்னையில் வெள்ளப் பாதிப்பைத் தடுக்க

# கொசஸ்தலை, ஆரணி ஆறுகளை இணைக்க புதிய திட்டம்!

### நீர்வளத்துறை நடவடிக்கை!

சென்னை, ஜூன் 25- சென்னையில் வெள்ள பாதிப்பை தடுக்க கொசஸ்தலை, ஆரணி ஆறுகளை இணைக்க புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மழைநீரும், ஏரியில் இருந்து திறந்து விடப்பட்ட நீரும் சேர்ந்து சென்னையில் பல இடங்களில் வீடுகளை மூழ்கடித்தது. 2 ஆறுகளை இணைக்கும் வகையில் விரைவில் ஆய்வு நடத்த நீர்வளத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

வடகிழக்கு பருவமழை காலங்களில் சென்னையில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. கடந்த 2015ம் ஆண்டு ஒரே நாளில் பெய்த அதிக கன மழையால் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து அதிக அளவில் வெள்ளம் திறந்து விடப்பட்டது. மழைநீரும், ஏரியில் இருந்து திறந்து விடப்பட்ட நீரும் சேர்ந்து சென்னையில் பல இடங்களில் வீடுகளை மூழ்கடித்தது. அதன் பிறகு கடந்த 2011ம் ஆண்டு பெய்த கனமழையாலும் சென்னை வெள்ளக் காடானது. வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சென்னையில் ஆறுகளின் கரையோரம் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றப்பட்டு அங்கிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

ஆனாலும் தனித் தனியாக எடுக்கப்படும் நடவடிக்கைகளால் சென்னையில் வெள்ள பாதிப்பை தடுக்க முடியாது. எனவே சென்னையில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் ஆலோசனை செய்து வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக சென்னையில் வெள்ளப் பாதிப்பை தடுக்க திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள ஆறுகளை இணைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதல் கட்டமாக கொசஸ்தலை ஆறு மற்றும் ஆரணி ஆறுகளை இணைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த 2 ஆறுகளையும் இணைக்கும் வகையில் விரைவில் ஆய்வு நடத்த நீர்வளத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொசஸ்தலை மற்றும் ஆரணி ஆறுகளை இணைப்பதற்கான தொழில் நுட்ப சாத்தியக்கூறுகளும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வடசென்னை பகுதியில் கடல்நீர் முகத்துவாரத்தின் வழியே ஆறுகளில் புகுவதை தடுக்க இந்த நதிகள் இணைப்பு தேவைப்படுகிறது.

## சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர்க் கட்டணங்களை தாமதமாகச் செலுத்தும்

# நுகர்வோருக்கு மேல்வரி 1 சதவீதமாக குறைப்பு!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 25- 01.07.2023 முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் குடிநீர் / கழிவு நீரகற்று வரி மற்றும் குடிநீர் கட்டணங்களை காலதாமதமாக செலுத்தும் நுகர்வோருக்கு மேல் வரி (Surcharge) மாதத்திற்கு1.25 என்ற சதவீதத்தில் இருந்து 1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது என சென்னை குடிநீர் வாரிய தகவல் தெரிவித்துள்ளது.

01.07.2023 முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் குடிநீர் / கழிவு நீரகற்று வரி மற்றும் குடிநீர் கட்டணங்களை காலதாமதமாக செலுத்தும் நுகர்வோர்களுக்கு மேல் வரி (Surcharge) மாதத்திற்கு1.25 என்ற சதவீதத்தில் இருந்து 1 சதவீதமாக குறைக்கப்படும்.

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி மற்றும் குடிநீர் கட்டணங்களை காலதாமதமாக செலுத்தும் நுகர்வோருக்கு மாதத்திற்கு 1.25% என்ற விகிதத்தில் மேல் வரி (Surcharge) வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நுகர்வோர்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது வசூலிக்கப்பட்டு வரும் மேல் வரி 1.25% இருந்து 1.7.2023 முதல் 1% குறைத்திட சென்னை குடிநீர் வாரியம் தீர்மானித்துள்ளது. எனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள் (மண்டலம் 1 முதல் 15 வரை) உள்ள நுகர்வோர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள் குடிநீர்/கழிவு நீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தி மேல் வரியினை தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.